செ.வெ.எண்: 07 / 2020 நாள்: 06.03.2020

# திருப்பூர் மாவட்டம்.

## மின்னணு கழிவுகள் மேலாண்மை தகவல், விளக்கம் மற்றும் செயல்முறை பயிற்சி பட்டறையினை

## மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

திருப்பூர் காங்கயம் சாலை, காயத்ரி ஹோட்டல் கூட்டரங்கில், இன்று (06.03.2020) மாவட்ட மாசுக்கட்டுப்பாடு வாரியயத்தின் சார்பில் மின்னணு கழிவுகள் மேலாண்மையின் கீழ் தகவல், விளக்கம் மற்றும் பயிற்சி கூட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

தொழிற்சாலைகள் மூலம் உருவாகும் மாசினை கட்டுப்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நீர்ச்சட்டம் 1974 மற்றும் காற்று சட்டம் 1981 மற்றும் சுற்றுச்சூழல் சட்டம் 1981ன் கீழ் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களின் செயல்பாட்டால் உருவாகும் மாசுபடும் தொழிற்சாலை கழிவுகளால் ஏற்படும் மாசினை போன்று சுற்றுச்சூழலுக்கும் பொதுமக்களின் சுகாதாரத்திற்கும் பெருத்த தீங்கை விளைவிக்கின்றன. அத்தகைய மாசுபாட்டினை தடுக்க மாசுகட்டுப்பாடு விதிகளை தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் நடைமுறை படுத்தி வருகிறது. அதன்படி, பயன்பாட்டிற்கு பின் வீடுகள் மற்றும் நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்படும் கம்புயூட்டர், டி.வி, பிரிட்ஜ், குறுந்தகடு போன்ற மின்னணு கழிவுகள் முறையாக சேகரிக்கப்பட்டு மேலாண்மை செய்யப்படாவிட்டால் குரோமியம், ப்ரோமின், பேரியம், நிக்கல் போன்ற தீங்கு விளைவிக்கக்கூடிய ரசாயனங்கள் நீர், நிலம் மற்றும் காற்று ஆகியவற்றை மாசுபடுத்தக்கூடியவை அதனால் மின்னணு கழிவுகளை உருவாக்குபவர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்த தகவல், விளக்கம் மற்றும் பயிற்சி பட்டறை இன்று (06.03.2020) சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்றைய நாகரீக மற்றும் வளர்ச்சி அடைந்த சமூக வாழ்க்கையில் மின்னணு கழிவுகள் உற்பத்தியாவது தவிர்க்க முடியாததாக இருந்தாலும் அதில் தொடர்புடைய மின்பொருள் உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் பயன்படுத்துவோர் என அனைத்து தரப்பினரும், சமூக சிந்தனையுடன் கழிவுகளை வெளியேற்றினால் இந்த சுற்றுச்சூழலை பாதுகாப்பதுடன்

பொதுசுகாதாரத்திற்கும் நமது பங்கினை ஆற்ற முடியும். இன்று அளிக்கின்ற பயிற்சி பட்டறையில் மின்னணு கழிவுகளின் வகைகள் அவற்றின் தன்மைகள், முறையாக கையாளாமல் விட்டால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து விளக்கப்படவுள்ளது. மேலும், மின்னணு கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016 ன் கீழ் மென்பொருள் உற்பத்தி செய்வோர்கள், அதை சந்தைப்படுத்துவோர் மற்றும் பயன்படுத்தக்கூடிய தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் மின்னணு கழிவுகளை சேகரித்து பிரிப்பவர்கள் மற்றும் மறு பயன்பாட்டிற்கு மாற்றுபவர்கள் ஆகியோரின் பொறுப்புகளை உணர்ந்து இத்திட்டங்களை அறிந்து சிறப்பாக கடைபிடித்தால் கிராமம் மற்றும் நகரப்பகுதிகள் தூய்மையாகவும் மற்றும் சுகாதாரமாகவும் இருக்கும். இத்தகைய திட்டங்களுக்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ஜெ.ரூபன்சங்கர்ராஜ், உதவி இயகக்குநர் (ஊராட்சிகள்), திரு.பாலசுப்பிரமணியம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் திரு.செந்தில் விநாயகம் (திருப்பூர் வடக்கு), திரு.சண்முகம் (திருப்பூர் தெற்கு) மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**